# இராவண காவியம்

1. இராவண காவியம் - குறிப்பு வரைக.

20 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெருங்காப்பியம் இராவண காவியம். இராவண காவியம் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரிக் காண்டம், போர்க்காண்டம் முதலிய 5 காண்டங்களையும், 3100 பாடல்களையும் கொண்டது. இயற்றியவர் புலவர் குழந்தை. இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவண காவியம்.

2. புலவர் குழந்தை குறிப்பு வரைக.

பிறப்பு : 1.7.1906

பணி : ஆசிரியராகப் பணியைத் தொடங்கி பவானி நகரில் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும் பணியாற்றினார்.

படைப்புகள் : இராவண காவியம், அரசியரங்கம், நெருஞ்சிப்பழம், யாப்பதிகாரம், தொடையதிகாரம், இன்னூல் உள்ளிட்ட 30 க்கும் மேலான நூல்கள்.

சிறப்பு : தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 நாள்களில் திருக்குறளுக்கு உரை எழுதினார்.

3. இராவண காவியம் குறிப்பிடும் குறிஞ்சி நில வருணணையை எழுதுக:

அருவிகள் பறையாய் ஒலிக்கும்; பைங்கிளி தமிழிசை பாடும்; பொன் மயில் சிறகு விரித்து ஆடும். இக்காட்சியினைப் பூக்கள் மலர்ந்த மரக்கிளையின் மீது நின்று குரங்கினங்கள் மிரட்சியுடன் பார்க்கும். தீயில் இட்ட சந்தன மரக்குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும், உலையில் நெல்லரிசிச் சோற்றின் மணமும், காந்தள் மலரின் மணமும் எங்கும் தோய்ந்து கிடப்பதால் குறிஞ்சி நிலம் எங்கும் மணக்கின்றது.

4. இராவண காவியம் குறிப்பிடும் பாலை நில வருணணையை எழுதுக.

வெயிலின் வெப்பம் தாங்காது செந்நாய்க்குட்டிகளின் வாய் உலர்ந்து குழறியது. தாய் நாய் வருந்தி தான் வெயிலில் நின்று குட்டியை இளைப்பாறச் செய்தது. எருதின் கொம்பு போன்ற பாலைக் காயை நிலத்தில் போட்டுக் கோலினால் அடித்து வெடிக்குமாறு விளையாடினர்.

அவ்வோசையைக் கேட்ட பாலை நிலப் பறவைகள் அச்சத்துடன் பறந்தன.

5. மருத நிலச் சிறுவர்களின் செயல் யாது?

சிறுவர்கள் தாமரை பூத்திருந்த குளத்தில் நீராடினர். அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து அதன் வடிவ அழகு கண்டு மகிழ்ந்தனர். சிறுகழல் அணிந்த சிறுவர் வைக்கோற் போர் குலுங்கிடும்படி ஏறி தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து இளநீரை அருந்தினர்.

6.இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

எருதின் கொம்பு போன்ற பாலைக் காயை நிலத்தில் போட்டுக் கோலினால் அடித்து வெடிக்குமாறு விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பாலை நிலப் பறவைகள் அச்சத்துடன் பறந்தன.

தும்பியானது கரையை நெருங்கி வரும் மலை போன்ற அலையைத் தடவி விட்டு, கடற்கரை மணலில் உலவி விட்டு. காற்றில் தன் சிறகை உலர்த்தி விட்டு, தாமரை போன்ற பெண்கள் முகத்தை நோக்கிச் செல்லும். அது வானில் முழுநிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகக் காட்சி போல உள்ளது.